வெள்ளிவாயல்சாவடி மற்றும் ஒரகடம் ஆகிய பகுதிகளில் அமையவுள்ள இத்திட்டத்தின்மூலம் 3,000 பேர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். (மேசையைத் தட்டும் ஒலி)

4. புகழ்பெற்ற ராயல் என்ஃபீல்ட் மோட்டார் சைக்கிள்களைத் தயாரிக்கும் எய்ஷர் மோட்டார் நிறுவனம் (Eicher Motors Limited) புதிய தொழிற்சாலை ஒன்றினை ஒரகடத்தில் நிறுவ முன்வந்துள்ளது. இதற்காக, ஒரகடம் சிப்காட் தொழிற்பூங்காவில் 50 ஏக்கர் நிலத்தை எனது அரசு வழங்கியுள்ளது. அங்கு 350 கோடி ரூபாய் முதலீடு செய்ய இன்று அந்நிறுவனம் தமிழ்நாடு அரசுடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இதன்மூலம் 300 புதிய வேலைவாய்ப்புகள் உருவாகும்.

5. இதேபோன்று, ஆர்.பி. கோயங்கா குழுமத்தின் நிறுவனமான ஃபிலிப்ஸ் கார்பன் பிளாக் லிமிடெட் நிறுவனம் (Philips Carbon Black Limited), டயர் தயாரிப்பதற்குத் தேவையான கார்பன் பிளாக் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றினை 350 கோடி ரூபாய் முதலீட்டில் திருவள்ளூர் மாவட்டம், தேர்வாய்க்கண்டிகை சிப்காட் தொழிற்பூங்காவில் அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இன்று கையொப்பமிட்டது. இத்தொழிற்சாலையில் 230 நபர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்று ஏற்படுத்தப்பட்ட இந்த ஐந்து புரிந்துணர்வு ஒப்பந்தங்களின்மூலம் தமிழகத்திற்கு புதியதாக வரக்கூடிய முதலீடு குறைந்தபட்சம் 5,700 கோடி ரூபாய் ஆகும். (மேசையைத் தட்டும் ஒலி) புதிதாக உருவாகும் வேலைவாய்ப்புகள் 9,530 ஆகும். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்னும், பல தொழில் முதலீட்டு முன்மொழிவுகள் அரசின் பரிசீலனையில் உள்ளன என்பதையும், அவற்றுக்கான ஒப்புதல் விரைவில் வழங்கப்பட்டு, அதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் விரைவில் கையொப்பமிடப்பட உள்ளன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(ஈ) இராமேஸ்வரம், இந்திய கடலோரக் காவல்படை கப்பல் மோதி மரணமுற்ற மீனவர் குடும்பத்திற்கு நிவாரணம் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிகவும் பழமை வாய்ந்த தொழில்களில் ஒன்றான மீன்பிடித் தொழில்மூலம் உயர்தர புரதச் சத்துடன் கூடிய

தரமான உணவுத் தேவையினைப் பூர்த்தி செய்வதிலும், வேலைவாய்ப்புகளை உருவாக்குவதிலும், அந்நியச் செலாவணியை ஈட்டுவதிலும் முக்கியப் பங்கினை தமிழக மீனவர்கள் வகிக்கிறார்கள்.

முற்பகல் 11–25

இப்படிப்பட்ட இன்றியமையாத் தொழிலைச் செய்யும் மீனவர்களின் நலன் காக்கும் வகையில், மீன்பிடி தடைக் காலத்தில் நிவாரணத் தொகை வழங்குவது உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகளை எனது அரசு எடுத்து வருகிறது.

தமிழக மீனவர்கள் மீதான இலங்கை கடற்படையினரின் தாக்குதல்களை நிறுத்த உடனடியாக நடவடிக்கை எடுக்கவும், இந்நிகழ்வுகளை ஒரு தேசிய பிரச்சினையாகக் கருதி பிரச்சினைக்குத் தீர்வு காணவும் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை கடிதம்மூலம் பலமுறை வலியுறுத்தியுள்ளேன்.

இந்தச் சூழ்நிலையில், 10–5–2012 அன்று பாம்பன் கிராமத்தைச் சார்ந்த 5 மீனவர்கள் ஒரு நாட்டுப் படகில் இராமேஸ்வரம் அருகே அரியமான் கடற்கரையிலிருந்து நான்கு கடல் மைல் தொலைவில் மீன் பிடிக்கும் பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது, இரவு 8–45 மணியளவில் இந்திய கடலோரக் காவல் படையின் கப்பலொன்று மீன் பிடிப்பு மேற்கொண்டிருந்த இப்படகின்மீது மோதியதாகத் தெரிகிறது. இதன் காரணமாக மீன்பிடிப் படகு சேதமுற்று கடலில் மூழ்கியது. படகில் இருந்த 5 மீனவர்களில், நான்கு மீனவர்கள் சிறிது தொலைவு நீந்தி வேறு ஒரு வள்ளத்தில் ஏறி கரை சேர்ந்தனர். மற்ற ஒரு மீனவரான திரு. பௌனிராஜ் என்பவரின் மகன் கால்வின் மில்லர் காயமுற்று நீரில் மூழ்கி காணாமல் போய்விட்டார். 12–5–2012 அன்று காலையில் இந்த 19 வயது இளைஞனின் உடல் மண்டபத்திலிருந்து 7 கடல் மைல் தொலைவில் கண்டுபிடிக்கப்பட்டது.

இந்தச் செய்தியைக் கேட்டு அதிர்ச்சியடைந்த நான், அகால மரணமடைந்த மீனவர் கால்வின் மில்லர் குடும்பத்திற்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்ததுடன், முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ஐந்து இலட்சம் ரூபாய் நிவாரண உதவியை உடனடியாக அளித்திட உத்தரவிட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2012 மே 14] *[செல்வி ஜெ ஜெயலலிதா]*

எனது உத்தரவின்பேரில், தமிழக அரசின் தலைமைச் செயலாளர் அவர்கள் புது டெல்லியில் உள்ள இந்தியக் கடலோரக் காவல் படையின் தலைமை இயக்குநரை கடிதம்மூலம் தொடர்புகொண்டு இவ்விபத்தின் உண்மை நிலையினை அறிய விரிவான விசாரணை ஒன்று மேற்கொள்ள வேண்டுமென்றும், மீனவரின் இறப்பிற்குக் காரணமான நபர்கள்மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டுள்ளார்.

மீனவர்களின் நலன் காப்பதற்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்து வரும் எனது தலைமையிலான அரசு, இந்நிகழ்வில் பாதிக்கப்பட்ட மீனவரின் குடும்பத்திற்கு நியாயம் கிடைப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

3. தொழிற்பயிற்சி மேம்பாடு, அங்கன்வாடிகள் நவீனமயமாக்கல், புதிய தொழில் முதலீடுகள், மரணமுற்ற மீனவர் குடும்பத்திற்கு நிவாரணம்— முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.*

முனைவர் செ.கு. தமிழரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போற்றுதலுக்குரிய தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை, தமிழகத்தின் வெகுமக்கள் தங்கள் வாக்குகளால் தேர்ந்தெடுத்து—தேர்தல் முடிவுகள் வந்து இன்று ஓராண்டு நிறைந்து இருக்கிற இந்த நாளிலே—கடந்த வருடம் 13 ஆம் தேதி தேர்தல் முடிவுகள் வந்தது. தேர்தல் முடிவுகள் வந்து இன்று ஓராண்டு முடிவுற்று இருக்கிற இந்த நாளிலே, ஒவ்வொரு நாளும் இந்த மன்றத்திற்கு வருகிறபோது, மாற்றம் தந்த இந்த மக்களுக்கு ஏற்றம் தரவேண்டும் என்கிற அந்த மகத்தான உணர்வோடு (மேசையைத் தட்டும் ஒலி) ஏங்கித் தவித்துக் கொண்டிருக்கிற ஏராளமான ஏழை மக்களுக்கு தாராளமாக தமிழக அரசு ஏதேனும் செய்ய வேண்டும் என்கிற அந்த பெரும் நோக்கோடு என்ன செய்யலாம் என்று உள்ளத்தால் திட்டமிட்டு, உணர்வுகளால் வடிவமைத்து, விரைந்த செயல்களால் அதற்கு ஒரு சட்டமாக்குகிற வகையிலே இந்தச் சட்டமன்றப் பேரவையிலே 'பசிக்குத் தவிக்கிற ஒருவன் பனம் பழம் கிடைக்காதா' என்று ஏங்குகிறபோது தங்கத்*